**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 107** **நாள்: 11.08.2016**

# மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுவதை தடைசெய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வு சட்டம் 2013 குறித்த விழிப்புணர்வு கூட்டம் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்களின் தலைமையில் இன்று நடைபெற்றது !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் தலைமையில் இன்று (11.08.2016) அம்மா மாளிகை அரங்கில் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுவதை தடை செய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வு சட்டம் 2013 குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுவதற்கான மறுவாழ்வு சட்டம் 2013ன் இரண்டு முக்கிய அம்சங்கள் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுதல் முற்றிலுமாக தடை செய்வதும், சுகாதாரம் அற்ற கழிப்பிடங்களை முற்றிலுமாக அகற்றுதல் அல்லது சுகாதார கழிப்பிடமாக மாற்றுதல் என்பதாகும்

இதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் சுகாதாரமற்ற கழிப்பிடங்கள் மற்றும் மனிதக் கழிவுகளை மனிதனே அள்ளும் தொழில் செய்தவர்களை கணக்கெடுக்கும் பணி ஆகஸ்டு மாதம் 2014ல் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, சுகாதாரமற்ற கழிப்பிடங்கள் 5750 எனவும், மனிதக் கழிவுகளை மனிதனே அள்ளும் தொழில் செய்தவர்கள் 252 பேர் எனவும் கண்டறியப்பட்டது.

சுகாதாரமற்ற கழிப்பிடங்களை சுகாதார கழிப்பிடமாக மாற்றுவதற்கு அல்லது இடிப்பதற்கு கழிப்பிடத்தின் உரிமையாளர்களுக்கு தாக்கீது வழங்கப்பட்டது. இதில் 1398 கழிப்பிடங்கள் இடிக்கப்பட்டும், 3308 கழிப்பிடங்கள் சுகாதார கழிப்பிடங்களாகவும் மாற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 446 கழிப்பிடங்களை இடிப்பதற்கும், 598 கழிப்பிடங்களை சுகாதாரமாக மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மனிதக் கழிவுகளை மனிதனே அள்ளும் தொழிலாளர்கள் என கண்டறியப்பட்ட 252 நபர்களின் விவரங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டது. உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மறுகணக்கெடுப்பு செய்யப்பட்டதில் 170 நபர்கள் என தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இந்த 170 நபர்களின் விவரங்கள் அனைத்தும் மாநில அரசின் சமூக நீதி அமைச்சகம் துறைக்கும், மாநில அரசின் ஆதிதிராவிடர் நலத்துறைக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதில் 129 நபர்களுக்கு ஒருமுறை பணப்பயன் அதாவது ரூ.40,000/– சம்பந்தப்பட்ட நபர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது. மீதமுள்ளவர்களுக்கு பணப்பயன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

05.03.2015 நாளிட்ட மாநில அரசின் அரசு இதழில் 15.03.2015 என நாள் குறிப்பிட்டு அன்று முதல் மனிதக் கழிவுகளை மனிதனே கையால் அள்ளும் தொழில் செய்வது தடை செய்வதாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும் இவ்வாறான பணிகள் மேற்கொள்ளப்பட்டு உயிரிழப்புகள் தொடர்ந்து ஏற்படுவதை முழுவதுமாக தடுக்க இந்த விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் நச்சுத்தொட்டி மற்றும் கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு இறந்தவர்கள் என 52 நபர்கள் என தெரிவித்து, அவர்களின் வாரிசுதாரர்கள் விவரங்கள் கண்டறியுமாறு கோரப்பட்டதில், 20 நபர்களின் விவரங்களை கண்டறியப்பட்டு, அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு கண்டறியப்பட்ட 20 வாரிசுதாரர்களில் 9 நபர்களுக்கு ரூ.3 இலட்சமும், 4 நபர்களுக்கு ரூ.10 இலட்சமும், 3 நபர்களுக்கு பகுதித் தொகையாக ரூ.4 இலட்சமும் கருணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 நபர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கையும், 1 நபர் பற்றிய விவரங்கள் பரிசீலனையிலும் உள்ளது.

இந்தக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.பிரவீண் பி. நாயர், இ.ஆ.ப., மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**